**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஆத்தூர்</u>**

**முன்னிலை : பெ.க.சிவக்குமார்,**
**நீதித்துறை நடுவர் எண்.1, ஆத்தூர்.**
**(முழுக்கூடுதல் பொறுப்பு)**

**<u>குடும்ப வன்முறை அசல் மனு 01/2019</u>**

2019-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30-ம் நாள் புதன் கிழமை

திருவள்ளுவராண்டு 2049 விளம்பி வருடம் தைத்திங்கள் 16-ம் நாள்

திருமதி. மகாலட்சுமி (29),
க/பெ. கலியமூர்த்தி,
த/பெ. ரங்கசாமி,
அருந்ததியர் காலனி,
கல்லாநத்தம் கிராமம்,
ஆத்தூர் வட்டம்,
சேலம் மாவட்டம். .... புகார்தாரர்

// இடையே //

1. திரு. ஆர்.கலியமூர்த்தி (36),
த/பெ. ராஜு,
2. திருமதி. ஆர்.சூரியகாந்தி (65),
க/பெ. ராஜு
3. திருமதி. விஜயா (34),
க/பெ. செல்வம்,
த/பெ. கலியமூர்த்தி
<u>மேற்கண்ட மூவரின் முகவரி</u>
மதுரைவீரன் கோயில் அருகில்,
அருந்ததியர் தெரு,
வெண்பாவூர் கிராமம்,
வேப்பந்தட்டை வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம்.
4. திருமதி. சரோஜா (40),
த/பெ. காசி,
5. திரு. காசி, (45)
6. திருமதி. மகாலட்சுமி (42),
க/பெ. ராமசாமி
7. திருமதி. செல்லம்மாள் (38),
க/பெ. ரங்கசாமி
<u>4 முதல் 7 எதிர்மனுதாரர்களின் முகவரி</u>
அருந்ததியர் தெரு, மெயின்ரோடு,
வெண்பாவூர் கிராமம்,
வேப்பந்தட்டை வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம். .... எதிர்மனுதாரர்கள்.

இப்புகாரானது கடந்த 10.01.2019-ம் நாளன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. டி.டி. சிவப்பிரகாசம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு. கருணாநிதி அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றத்தால் வழங்கப்படும்,

## <u>"தீர்ப்புரை "</u>

**<u>1. புகாரின் சுருக்கம் :-</u>**

கடந்த 19.10.2018 அன்று மனுதாரருக்கும், 1 ம் எதிர்மனுதாரருக்கும் சீர்வரிசை செய்து திருமணம் நடைபெற்றது. திருமணம் நிச்சயமான சமயத்திலிருந்தே எதிர்மனுதாரர்கள் வரதட்சணை போடவேண்டுமென சொல்லி கேட்டு வந்தார்கள். 1 ம் எதிர்மனுதாரரின் வீட்டில் கழிவறை மற்றம் குளியலறை இல்லாததால் திருமணமான முதல் நாளிலேயே அதிர்ச்சிக்கு ஆளாகி மனுதாரர் மனஉளைச்சலுக்கு ஆளானார். இதை கேட்டதற்கு எதிர்மனுதாரர்கள் அனைவரும் மனுதாரரை கேவலமாக திட்டி, குளியலறை, கழிவறை கட்டுவதற்கு உன் அப்பா வீட்டிலிருந்து பணம் கொண்டு வந்தாயா என கேவலமாக பேசினார்கள். முதல் இரவு முடிந்தபிறகு இனி எதுவும் செய்ய முடியாதென எதிர்மனுதாரர்கள் மனுதாரரை மிரட்டி வந்தார்கள். 1 ம் எதிர்மனுதாரர் கெட்டப் பழக்கத்திற்கு அடிமையாகியிருப்பதை தெரிந்து அந்த பழக்கங்களை விடச்சொல்லி கேட்டதற்கு விட மறுத்துவிட்டார். மேலும் 1 ம் எதிர்மனுதாரருக்கு தூக்கத்தில் சத்தமாக குரட்டைவிடும் பழக்கமும், பெரிகோஸ் நோய் இருப்பதை மறைத்தும் திருமணம் செய்துவிட்டார்கள். இதை கேட்டதற்கு திருமணமாகிவிட்டது, முடியவேண்டியதெல்லாம் முடிந்துவிட்டது, விருப்பமிருந்தால் இரு, இல்லையென்றால் உன் அம்மா வீட்டிற்கு ஓடி விடு என 1 ம் எதிர்மனுதாரர் மிரட்டினார். 04.11.2018 ம் தேதி தீபாவளிக்கு மனுதாரரின் வீட்டிற்கு வந்தபோது ஏழ்மை நிலை காரணமாக துணி மட்டும் எடுத்துக் கொடுத்ததால் 1/2 பவுனில் மோதிரம் போடமுடியாத வீட்டில் பெண் எடுத்துவிட்டதாக வாக்குவாதம் செய்து முகத்தில் எச்சில் துப்பி, எட்டி உதைத்து அவமானப்படுத்திவிட்டார். திருமணத்தின்போது அனைத்து சீர்வரிசைப் பொருட்களும் 1 ம் எதிர்மனுதாரர் வீட்டில் உள்ளது. 1 ம் எதிர்மனுதாரர் மோட்டார் தொழில் மூலமும், பால்வியாபாரம் மூலமும், லேவாதேவி தொழில் செய்வதன் மூலமும் மாதம் ரூ.40 ஆயிரத்திற்கு மேல் சம்பாதித்து சுகபோகமாக வாழ்ந்து வருகிறார். ஆகவே, மனுதாரரை வரதட்சணை கேட்டு துன்புறுத்திய அனைத்து

எதிர்மனுதாரர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து வாழ்க்கைப் பொருளுதவியாக ரூ.10 ஆயிரத்தை வழங்க உத்தரவிடவேண்டும். மேலும் குடும்ப வன்முறை செய்த எதிர்மனுதாரர்கள் அனைவரும் இழப்பீடு வழங்க உத்தரவிடவேண்டும்.

2. **பதிலுரையின் சுருக்கம் :-**

1ம் எதிர்மனுதாரரின் வசதி வாய்ப்புகள் தெரிந்து திருமண ஏற்பாடு செய்யப்பட்டு திருமணம் நடந்தது. திருமணத்தின்போது 1ம் எதிர்மனுதாரர் புகார்தாரருக்கு 1/2 பவுன் தாலியும், நிச்சயத்தின்போது 1/4 பவுன் மோதிரமும் அளித்தார். திருமணத்திற்கு பிறகு 1ம் எதிர்மனுதாரரும், புகார்தாரரும் 3 நாட்கள் மட்டுமே குடும்பம் நடத்தினார்கள். தீபாவளி முடிந்து புகார்தாரரை ஊருக்கு அழைத்ததற்கு தாம் 5 நாட்கள் கழித்து வருவதாக மனுதாரர் சொல்லிவிட்டார். 5 நாட்கள் கழித்து அழைத்தபோது 1ம் எதிர்மனுதாரரின் கழுத்தில் ஏற்கனவே இருந்த தங்க செயின் இல்லாததை பார்த்து எதற்கும் வக்கில்லாதவர் என மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரை திட்டியுள்ளார். தனது தாயாருக்கு உடல்நலம் சரியில்லாததால் மருத்துவரிடம் அழைத்துச் சென்று பார்த்துவிட்டு வருவதாக சொல்லியும் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு வராமல் ஆத்தூர் மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அந்த புகாரை விசாரிக்க திருமணம் நடந்த இடத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கு புகாரை அனுப்பி வைத்தார்கள். அங்கு அழைத்து விசாரித்தபோதும் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்த வாழ விருப்பமில்லையென மனுதாரர் சொல்லிவிட்டார். மீண்டும் ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் எவ்வளவோ எடுத்து சொல்லியும் சேர்ந்து வாழ மனுதாரர் சம்மதிக்கவில்லை. ஆகவே சேர்ந்து வாழ வரச்சொல்லி 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கெதிராக 204/2018 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் கூலி வேலை செய்து தன் குடும்பத்தை காப்பாற்றி வருகிறார். 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தனித்தனியே வசித்து வருவதால் மனுதாரரை எந்த கொடுமையும் செய்யவில்லை. ஆகவே, இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது.

3. மனுதாரர் தரப்பில் 1 சாட்சி விசாரிக்கப்பட்டு 4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் சாட்சிகள் விசாரிக்கப்படவோ, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவோ இல்லை.

4. மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் மனைவி என்பதைப் பொறுத்து எவ்வித மாற்றுக்கருத்தும் 1ம் எதிர்மனுதாரரால் முன்வைக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் வேண்டப்பட்ட மேற்கண்ட பரிகாரங்களைப் பொறுத்து குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பிரிவுகள் 19(8), 20, 22 ஆகிய பிரிவுகளில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தை முழுமையாக பரிசீலனை செய்கையில், குடும்ப உறவில் வாழ்ந்து வரும் பெண்ணானவர் மேற்கண்ட பரிகாரங்கள் அனைத்தையும் பெற உரிமையுடையவர் என மிகத்தெளிவாக்கப் பட்டுள்ளது. மேற்கண்ட பரிகாரத்தைப் பெற குடும்ப உறவில் மனுதாரர் வாழ்ந்து வந்தாலே போதுமானதாகும். மேற்கண்ட பரிகாரங்களைப் பெற வேறு எவ்விதமான நிபந்தனையும் மேற்கண்ட பிரிவுகளில் மனுதாரருக்கெதிராக வரையறுக்கப்படவில்லை. ஆகவே, மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் பிரிவதற்கு யார் காரணமென்ற பொருண்மை குறித்து இந்நீதிமன்றம் எவ்வித விவாதமும் மேற்கொள்ளவில்லை.

5. ஆனால், எதிர்மனுதாரர்கள் அனைவரும் மனுதாரரை பல வகைகளில் வரதட்சணை கேட்டு கேவலமாக பேசியதாக பிரிவு 22-ன் கீழ் மனுதாரரால் பரிகாரம் வேண்டப்பட்டுள்ளதால் மனுதாரர் உரைப்பதுபோல் எதிர்மனுதாரர்கள் மனுதாரரை கேவலமாக பேசி கொடுமை செய்தார்களா? என்பதைப் பொறுத்து முடிவு காண வேண்டியது அவசியமாக உள்ளதால் மேற்கண்ட பொருண்மை குறித்து முடிவுகாண இந்நீதிமன்றம் விழைகின்றது. நிச்சயமான தருணத்திலிருந்தும், திருமணம் முடிந்த பிறகும் அனைத்து எதிர்மனுதாரர்களும் வரதட்சணை அதிகமாகவேண்டுமென கேட்டு பலவகைகளில் தொல்லை செய்ததாக மனுதாரர் தனது சாட்சியத்தை முன்வைத்துள்ளார். மனுதாரர் உரைப்பதுபோல் நிச்சயமான தருணத்திலிருந்து பல வகைகளில் வரதட்சணை கேட்டு எதிர்மனுதாரர்கள் தொல்லை கொடுத்திருந்தால் அந்த திருமணத்தை நிறுத்ததுவதில் மனுதாரருக்கு எவ்வித தடையுமில்லை. ஆகவே, நிச்சயமான தருணத்திலிருந்து அனைத்து எதிர்மனுதாரர்களம் பலவகைகளில் மனுதாரரை வரதட்சணை அதிகமாக வேண்டுமென கேட்டு தொல்லை செய்ததான கூற்று முழுமையாக நம்பும்படியானதாக இல்லை.

6. அதுமட்டுமல்லாமல் சாதாரணமாக திருமண நிகழ்வு நடந்து குறைந்தது முதல் 4, 5 நாட்கள் திருமணம் சார்ந்த விசேஷ நிகழ்வுகள் இருக்கும். அவ்வாறான தருணங்களிலும் அனைத்து எதிர்மனுதாரர்களும் கூடுதல் வரதட்சணை கேட்டு தொல்லை செய்ததான கூற்றும் நம்பும்படியானதாக இல்லை. மேலும், திருமணமானதிலிருந்து சரியாக 15-வது நாள் தலைதீபாவளிக்கு மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் மனுதாரரின்

பெற்றோர் வீட்டிற்கு வந்துள்ளார்கள். அதாவது, மனுதாரரும், 1 ம் எதிர்மனுதாரரும் 15 நாட்கள் மட்டுமே ஒன்றாக வாழ்ந்துள்ளார்கள். இவ்வாறான சூழ்நிலையில் வெவ்வேறு இடத்தில் வசித்து வரும் 1 ம் எதிர்மனுதாரரின் சகோதரிகள் 1 ம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு வந்து மனுதாரரை கொடுமை செய்ததான கூற்று முழுமையாக ஏற்றுக்கொள்ளும்படியானதாக இல்லை. அதுமட்டுமல்லாமல், அவ்வாறு கொடுமை செய்ததாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக உரைத்து எவ்விதமான புகாரின் நகலையும் மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்கண்ட அனைத்து பொருண்மைகளையும் ஒன்றிணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரர் உரைப்பதுபோல் எதிர்மனுதாரர்கள் அனைவரும் மனுதாரரை கொடுமைக்கு ஆளாக்கியிருப்பதற்கான சாத்தியக்கூறுகள் அவ்வளவாக இல்லையென்பதால் எதிர்மனுதாரர்களுக்கெதிராக பிரிவு 22-ன்படி வேண்டப்பட்ட இழப்பீட்டு பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்லவென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

7. 1 ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் கணவர் என்பதைப் பொறுத்து எவ்வித மாற்றுக் கருத்தும் 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்படாததாலும் மனுதாரர் தம்மை பராமரித்துக்கொள்ளக்கூடிய நிலையில் உள்ளதாக எவ்வித மறுப்புரையும் 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் உரைக்கப்படாததாலும், 1 ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வாழ்க்கைப் பொருளுதவி வழங்க கடமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. 1 ம் எதிர்மனுதாரர் மோட்டார் தொழில் செய்தும், மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்தும், வட்டிக்கு விடும் தொழில் செய்தும் மாதம் ரூ.40 ஆயிரத்திற்கு மேல் சம்பாதித்து வருவதாக வெறுமனே மனுதாரர் தரப்பில்உரைக்கப்பட்டுள்ளதே தவிர, உரிய சாட்சியங்கள் மூலம் மேற்கண்ட பொருண்மையை நிரூபிக்க மனுதாரர் தரப்பில் எவ்வித முன்முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இருந்தபோதிலும், 36 வயதே நிரம்பிய, நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கும் 1 ம் எதிர்மனுதாரர் கூலி வேலைக்கு சென்றாலும் குறைந்தது மாதமொன்றுக்கு ரூ.10 ஆயிரமாவது சம்பாதிப்பதற்கு அதிகப்படியான சாத்தியக்கூறுகள் உள்ளது. மனுதாரர் தன்னை பராமரித்துக்கொள்ள குறைந்தபட்சம் மாதமொன்றுக்கு ரூ.3,500/- அவசியம் தேவைப்படும். ஆகவே, மனுதாரருக்கு மாதமொன்றுக்கு ரூ.3,500/-ஐ வாழ்க்கைப் பொருளுதவியாக வழங்கலாமென 1 ம் எதிர்மனுதாரருக்கு உத்தரவிடலாமென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

8. அடுத்ததாக, திருமணத்தின்பொழுது கொடுத்த சீர்வரிசைப்பொருட்களை திரும்ப அளிக்க உத்தரவிடவேண்டுமென மனுதாரரால் பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது. மனுதாரர் தனது சாட்சியத்தில், **“வீட்டிற்குண்டான என்னென்ன பொருட்களை கொடுத்தேன் என்றால், பீரோ-1, கட்டில்-1, மெத்தை-1, தலையணை-2, பித்தளை போனி-1, பித்தளை அண்டா-1, பித்தளை குடம்-1, சில்வர் அண்டா-1, அரிசி களையும் குண்டா-1, சில்வர்பால் குண்டா-1, சில்வர் டிரம்-1, பிரத்தளை தீபதட்டு-1, சில்வர் தட்டு-1, டபரா-1, சொம்பு-2, பித்தளை படி-1, சாப்பாட்டு குண்டா-1, சாப்பாட்டு தட்டு-2, வடித்தட்டு-2, வெண்கலத்தட்டு-1 சில்வர் அர்சனை கூடை-1, சில்வர் தாம்பாளம்-2 சில்வர் தூக்குவாளி-1, சில்வர் சின்ன டபரா-1, டம்பளர்-6, அரிசி களைந்து போடும் குண்டா-1, பித்தளை குத்து விளக்கு-1, கிரைண்டர்-1, பாய்-1, அரைபவுன் மோதிரம்-1, பிளாஸ்டிக் முக்காளி-1, முடிதட்டும் குச்சி சில்வர்-1, சில்வர் கூஜா-1, செருப்பு ஒருஜோடி, நகம்வெட்டி-1, தலைகட்டி துணி-1, அரைபவுன் மோதிரம்-1 ஆகியவற்றை கொடுத்தோம். மேற்கண்ட பொருட்களை எதிர்மனுதாரர் கொடுக்க தயாரா உள்ளாரென்றால் நான் பெற்றுக் கொள்கிறேன். 1 ம் எதிர்மனுதாரர் எனக்கு அரைபவுனில் தாலி அணிவித்து அதுவும், மூக்குத்தியும், 1/4 பவுன் மோதிரமும், மெட்டி ஆகியவை என்னிடம்தான் உள்ளதென்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான மேற்கண்ட பொருட்களை நான் 1 ம் எதிர்மனுதாரருக்கு தயாராக உள்ளேன் என்றால் சரிதான்"** என சாட்சியத்தை முன்வைத்துள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்கண்ட சாட்சியத்தை மறுத்துரைக்காததோடு, மேற்கண்ட பொருட்களை திரும்பத் தர தயாராக உள்ளதாகவும் உரைக்கப்பட்டுள்ளது. ஆகவே, மேற்கண்ட சீதனப்பொருட்களை மனுதாரருக்கு உத்தரவிடலாமென்றும் இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. மேலும், 1 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான மனுதாரர் வசமுள்ள பொருட்களை 1 ம் எதிர்மனுதாரரிடம் திரும்ப அளிக்க மனுதாரருக்கு உத்தரவிடலாமென்றும் இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

9. ஆகவே, இறுதியாக,

(அ) புகார்தாரருக்கு மாதமொன்றுக்கு இவ்வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து ரூ.3,500/-ஐ வாழ்க்கைப் பொருளுதவியாக வழங்க 1 ம் எதிர்மனுதாரருக்கு ஆணையிடப்படுகிறது.

(ஆ) புகார்தாரர் தனது சாட்சியத்தில் உரைத்துள்ள அனைத்து சீதனப்பொருட்களையும் 15 நாட்களுக்குள் 1 ம் எதிர்மனுதாரர் புகார்தாரருக்கு திரும்ப அளிக்கவேண்டுமென்றும், 1 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான புகார்தாரர் வசமுள்ள அரைபவுன் தாலி, மூக்குத்தி, அரைபவுன் மோதிரம், மெட்டி ஆகியவற்றை புகார்தாரர் 1 ம் எதிர்மனுதாரர் வசம் திரும்ப அளிக்கவேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

(இ) 2 முதல் 7 எதிர்மனுதாரர்களைப்பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்ட என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2019-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1, ஆத்தூர்.
(முழுகூடுதல் பொறுப்பு).

**<u>பின் இணைப்பு :</u>**
**<u>1. மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :</u>**

ம.சா.1 – திருமதி. மகாலட்சுமி

**<u>2. மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் :</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | | - | திருமண அழைப்பிதழ் |
| 2. | 29.11.2018 | - | வழக்கறிஞர் அறிவிப்பு |
| 3. | 12.12.2018 | - | பதிலறிவிப்பு |
| 4. | - | - | ஆதார் அட்டை |

**<u>3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் :</u>** – இல்லை –

நீதித்துறை நடுவர் எண்.1, ஆத்தூர்.
(முழுகூடுதல் பொறுப்பு).